# மார்ச் – 07 – வியாழன்

**நேர்மையாளரின் நெறியை ஆண்டவர் கருத்தில் கொள்வார்: பொல்லாரின் வழியோ அழிவைத் தரும். திபா. 1:6**

## முதல் வாசகம் : இணைச் சட்டம் : 30 : 15 – 20

மோசே மக்களை நோக்கிக் கூறியது :இதோ பார், வாழ்வையும் நன்மையையும், சாவையும் தீமையையும் இன்று நான் உனக்கு முன்பாக வைத்துள்ளேன்.அது இதுதான் இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். உன் கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு பாராட்டு. அவரைப் பின்பற்றி அவரது வழியில் நட. அவரது கட்டளைகளையும், நியமங்களையும், முறைமைகளையும் கடைப்பிடி. அப்போது நீ வாழ்வாய், நீ பலுகுவாய். நீ உடைமையாகக் கொள்ளப்போகும் நாட்டில் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசிவழங்குவார்.ஆனால், உனது உள்ளம் விலகிச் சென்று, நீ செவிகொடாமல் கெட்டலைந்து, வேறு தெய்வங்களை வணங்கி, அவற்றுக்குப் பணிவிடை புரிந்தால்,இன்று நான் உனக்கு அறிக்கையிட்டுக் கூறுகிறேன். நீ நிச்சயம் அழிந்துபோவாய். நீ உரிமையாக்கிக் கொள்ளுமாறு, யோர்தானைக் கடந்து சென்றடையும் பூமியில் உன் வாழ்நாள் நீடித்திருக்காது.உன் மேல் இன்று நான் விண்ணையும் மண்ணையும் சான்றாக அழைத்து, வாழ்வையும் சாவையும், ஆசியையும் சாபத்தையும் உனக்கு முன் வைக்கிறேன். நீயும் உனது வழித்தோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வைத் தேர்ந்துகொள்.கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு பாராட்டு அவரது குரலுக்குச் செவிகொடு அவரையே பற்றிக் கொள். ஏனெனில், அவரே உனது வாழ்வு அவரே உன் நீடிய வாழ்வு. அதனால், ஆபிரகாம்,ஈசாக்கு யாக்கோபு என்னும் உன் மூதாதையருக்குக் கொடுப்பதாக ஆண்டவர் ஆணையிட்டுக் கூறிய நாட்டில் நீ குடியேறுவாய்.

**பதில்பாடல் :** ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டோர் பேறுபெற்றோர்.

## நற்செய்தி : லூக்கா 9 : 22 - 25

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கி, மேலும் இயேசு, ”மானிட மகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலைசெய்யப்படவும் மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும்” என்று சொன்னார். பின்பு அவர் அனைவரையும் நோக்கி, ”என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில், தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவார். என்பொருட்டுத் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக்கொள்வார். ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?” என்றார்.

**தியானம் :** இன்றைய இறை தியான வாசகங்கள் நீரோடையில் நடப்பட்ட மரம் எவ்வாறு பலன் கொடுக்கின்றனவோ அதேபோன்று அவர் எமக்கு கொடுத்த கட்டளைகளையும், நியமங்களையும் கடைப்பிடித்து, பிறருக்கு பலன்கொடுக்கக் கூடியவர்களாக வாழ வேண்டுமென்று கூறுகின்றது. ஆனால் நாங்கள் கட்டளைகளைக் கடைப்பிடித்து பலன் கொடுக்கக் கூடி வகையில் வாழ்ந்து கொண்டிருக்கினறோமா என்று சிந்தித்துப் பார்ப்போம். ஏனென்றால் இறைவனை அன்பு செய்யும் படியும், உன்னை நீ அன்பு செய்வதோடு உன் அயலானையும் அன்பு செய்யும்படியாக இரண்டு கட்டளைகளைக் கொடுத்திருக்கின்றார். இறைவனோடு கொண்டுள்ள அன்பை இறையன்பு என்றும், பிறரோடு கொண்டுள்ள அன்பை பிறரன்பு என்று நாம் பார்க்கின்றோம். நாங்கள் இறைவனது கட்டளைகளைக் கடைப்பிடித்து பிறரோடு அன்பு கொண்டு ஒற்றுமையாக, விட்டுக்கொடுத்து இன்ப துன்பங்களில் பகிர்ந்து வாழும் பொழுது இறைவனையே நாங்கள் அன்பு செய்கிறோம் என்பதை புனித யோவான் நற்செய்தியல் பார்க்கின்றோம். ‘என் கட்டளைகளை ஏற்று கடைப்பிடிப்பவர் என்னை அன்பு செய்கின்றார் என்மீது அன்பு கொண்டுள்ளவர் மீது என் தந்தையும் அன்பு கொள்வார் (யோவான் 15:21). இன்று எமது குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையே தேவையற்ற வகையில் பிரச்சனை பிளவுகள், பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறும் பொழுது ஏற்றுக்கொள்ளாது அவர்களுக்கிடையே பிரச்சனை, நண்பர்கள். அயலவர்கள் என்று வேறுபட்ட பிச்சனைகள், இவ்வாறு அன்பில் நின்று விலகி நாங்கள் வாழ்ந்து வந்தேமானால் எவ்வாறு இறைவனின் ஆசீரைப் பெற முடியும், நல்ல பலன் கொடுக்கும் மரங்கள் போன்று எவ்வாறு பயன் கொடுக்க முடியும். இன்றைய நற்செய்தி வாசகத்தில் “என்னைப் பற்ற விரும்புபவர் ……………..நாள் தோறும் தன் சிலுவையை தூக்கிக்கொண்டு பின்பற்றட்டும்”(லூாக். 9:11) என்று பார்ப்பது போன்று எமது வாழ்க்கையில் எவ்வாறான துன்பங்கள், ஏமாற்றங்கள், சோர்வுகள் ஏற்பட்டாலும் யாவற்றையும் இறைவன் பாதம் ஒப்புக் கொடுப்போம், பயன் படுத்தும் இறைவா என்னைப் பயனுள்ள கருவியாக பயன்படுத்தம் என்று இறைவன் பாதம் எங்களை ஒப்புக்கொடுப்போம்.